05.02.2026 Mcop 319/2021 எ.ம.சா2 முத்துக்குமார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

எனது முதல்விசாரணை வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேன். விபத்து தேதியில் காப்பீடு ஊர்ஜிதத்தில் இருந்தது என்றால் சரிதான். களப்பணியாளர் அறிக்கையின் அடிப்படையில் முதல்விசாரணை வாக்குமூலம் தயார் செய்யப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் இருசக்கர வாகனத்தை ஓட்டிசென்ற போது திடீரென மனுதாரர் குறுக்கே வந்து விபத்தை ஏற்படுத்தினார் என கூறுவதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. மோட்டார் வாகன சட்டபிரிவு 170ன்படி உரிய அனுமதியில்லாமல் நான் சாட்சியம் அளிக்க முடியாது என்றும், அவ்வாறு அளித்த சாட்சியம் செல்லாது என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் மனுதாருக்கு கொடுக்க வேண்டிய இழப்பீட்டை குறைப்பதற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ். முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.